உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

## நீர்வேலியூர், அமரர்

# பண்டிதர் செ. துரைசிங்கம்

## அவர்களின்

# நினைவு மலர்

1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26-1-1980

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

நீர்வேலியூர், அமரர்

## பண்டிதர் செ. துரைசிங்கம்

அவர்களின்

# நினைவு மலர்


24-12-1979

அச்சுப்பதிப்பு :

விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள்

தோற்றம் :

14-09-1912

நிறைவு :

24-11-1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நீர்வேலி
## வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேவஸ்தானம்

பிரார்த்தனை

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

பண்டிதர், திரு. செல்லையா துரைசிங்கம் அவர்கள் தமது பூதஉடலை நீத்துப் பரகதி அடைந்து விட்டார்கள். நல்வினை புரிந்தோர் நற்கதி – சிவகதி – அடைவது திண்ணம். பண்டிதர் அவர்கள், வாழ்க்கையில் ஓர் இலட்சிய வாதியாகத் திகழ்ந்தார். வைதிக சைவ சமயியாகவும், காந்தீயத்தின் சத்தியம், அகிம்சை, உழைப்பு ஆகிய இயல் புகளுடன் கூடியவராயும் இவர் வாழ்வில் சோபித்தார். குருலிங்க சங்கம வழிபாட்டில் மிக நம்பிக்கை பூண்டவர். எங்கள் தந்தையார் தமது அந்திய காலத்தில் (1973-ம் ஆண்டில்) தமது நிர்வாகத்திலுள்ள வாய்க்காற்றரவைப் பிள்ளையார் ஆலயத்திருப்பணியைப் பூர்த்தி செய்ய ஆசிரியரை நாடிய பொழுது குருவின்பணியைச் சிரமேற்கொண்டு தனது இறுதி நாட்கள்வரை உழைத்தார். ஆலயத்தேர்த் திருப்பணிச் சபை மலர் ஆசிரியராகவும் பணி புரிந்தார். பெரியபுராண படனத்துக்கும் வேண்டிய உதவிகள் செய்தார். கோவில் நிர்வாகத்துக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லியும், திருப்பணிப் பொருளாளராகவும் இருந்ததோடு அமையாது குருபக்தியும், ஈகையும் உடையவராயும் இருந்தார். இன்று அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்கள் அவர் பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆசிரியரின் ஆன்மா மூலமூர்த்தியாம் விநாயகர் திருவடி நீழலிற் சேரப் பிரார்த்திப்போமாக.

இங்ஙனம்
ஆ. சந்திரசேகரக்குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்க்கை வரலாறு

சி. க. வேலாயுதபிள்ளை
(அகில இலங்கை காந்தி சேவா சங்கம்)

"பூலோகத்திலே மனிதனுடைய சரித்திரத்தில் மிகப் பெரிய விஷய மென்னவென்றால், அவனுடைய லௌகிக சித்திகளல்ல; அவன் கட்டி வைத்த அல்லது உடைத்துப் போட்ட ஏகாதிபத்தியங்களல்ல, சத்தியத்தையுந் தர்மத்தையுந் தேடிக்கொண்டு, யுகத்துக்கு யுகம் அவனுடைய ஆத்மா வளர்ச்சியடைந்து வந்திருக்கிறதே அதுதான் மிகப்பெரிய விஷயம்". — டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

பண்டிதர் துரைசிங்கம் அவர்கள் தாம் அறிவறிந்த காலந் தொடக்கம் சத்தியத்தையுந் தர்மத்தையுந் தேடி ஆராத வேட்கையுடன் அலைந்து திரிந்து ஈற்றில் அமரரானவர். அவர் சீருஞ்சிறப்பும் மிக்க உலக வாழ்வினைப் பெற்றிருந்தவர் போல வெளித்தோற்றத்துக்குக் காணப்பட்ட போதிலும் அந்த உலக வாழ்வில் 'தாமரையிலையில் நீர் போல' நின்று சஞ்சரித்தாரேயன்றி, அதில் ஒட்டி வாழ்ந்தவரல்லர். அவருடைய உள்ளம் சத்தியமே வடிவான பரம் பொருளிடத்திலும், தர்மத்தினிடத்திலும் பதிந்திருந்தது. அவருடைய ஆத்மா மிகுந்த உத்வேகத்துடன், கஷ்டப்பட்டவர்களுக்கு உதவிபுரியத் துடித்துக் கொண்டிருந்தது. பேதமற்ற அன்பின் வடிவமாகவே கடவுளைக் காண அவர் விழைந்தார். தமக்கு இயல்பாக அமைந்த சுவதர்மத்தை அதாவது தாய் தந்தையர், சகோதரர், குரு, மனைவி, மக்கள், உறவினர்கள், நண்பர்பால் தமக்கு இருந்த கடமைகளைத் தம்மால் இயன்றவரை நன்கு நிறைவேற்றினர். இவற்றை நிறைவேற்றும் போது அந்த நிறைவேற்றல்கள் பிறர் நலத்துக்குச் சிறிதும் முரண்படாத படி பார்த்துக்கொண்டார். தம்மை வளர்த்தெடுத்த சமுதாயத்துக்கும் தம்மாலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளை மிகுந்த அடக்கத்துடன் செய்தார். யாவற்றுக்கும் மேலாக ஈசனுக்குத் தொண்டு செய்வதில் இன்பங் கண்டார்.

**பிறப்பு:**

இந்த வியத்தகு மனிதர், சிவசங்கரபண்டிதர் போன்ற சான்ரோர்கள் வாழ்ந்திருந்து புகழ் பெற்றதும், நீர்வள நிலவளங்களாற் சிறப்பெய்தியதுமான நீர்வையம்பதியில் சைவவேளாண்மரபிற் பிறந்தவர். தந்தையார் செல்லையா அவர்கள் சிவபக்தி மிக்கவர். சிதம்பர தரிசனத்தையும் மேற்கொண்டவர். தாயார் முத்துப்பிள்ளை அவர்கள் பதிபக்தியிற் சிறந்த உத்தமி. விவசாயம், வணிகம் ஆகிய இருமுக்கிய தொழில்களையும் தமக்கேயன்றிப் பிறர்க்கும் பயன்படும்படி செய்து யாவரும் மதிக்க வாழ்ந்தவர்கள்.

பண்டிதரின் தமையனர் இராசா என்பவர் ஆங்கிலங் கற்று, மலாயா சென்று அங்கு உயர்பதவி வகித்தார். சகோதரி இராசம்மா என்பவர் தாவடியூர் இராமலிங்கம் ஆசிரியரவர்களை மணந்து நல்வாழ்வு பெற்றவர்.

**இளமையுங் கல்வியும்:**

இவர் தமது ஆரம்பக்கல்வியை நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர் புதல்வர் சிவப்பிரகாச பண்டிதர் தாபித்து நடத்திய சைவப்பிரகாச வித்தியாசாலையிற் பெற்றுக் கொண்டார். வீட்டுச்சூழலும், வித்தியாசாலைச் சூழலும் சிறப்பாயமைந்த காரணத்தால் தெய்வபக்தி, கடமையுணர்வு, நேர்மை, பணிவு, அஞ்சாமை போன்ற நற்குணங்கள் இவரிடங்காணப்பட்டன. தமது ஆசிரியர்களிடம் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஆசிரியர்களும் இவர்மீது அன்பைப் பொழிந்தார்கள். இன்று சமாதான நீதிபதியாய் விளங்கும் நடராசா ஆசிரியரவர்களிடம் இவருக்கிருந்த அன்புப்பிணைப்பு அளவிடற்கரியது.

1931-ம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெறச்சேரந்த பொழுது இவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய வாழ்வின் புதிய அத்தியாயம் ஆரம்பமானது. இவரது ஆத்மாவில் பதிந்திருந்த உள்ளுணர்வுகள் உருப் பெற்றுச் செயற்படுவதற்கேற்ற நல்ல சூழ்நிலை அங்கு கிடைத்தது.

இந்துப்போட் முகாமையாளர் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் சேவை மனப்பாங்கும் அவர் சைவத்துக்காற்றிய பணிகளும் இவரைப் பெரிதுங் கவர்ந்தன.

கலாசாலையதிபர் திரு. இ. சுவாமிநாதன் அவர்களின் கற்பித்தல் முறை — சரித்திர மனப்பழக்கம், உபஅதிபர் திரு. பொ. கைலாசபதி அவர்களின் தத்துவஞானம், கணித ஆற்றல், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் இலக்கிய ரசனை — இலக்கணப்புலமை எல்லாம் சேர்ந்து சேவையுணர்வும், ஒழுக்க சம்பத்தும், ஆழமான அறிவும், மிக்க நல்லாசிரியராய் இவரை உருவாக்கின. 1933-ம் ஆண்டு ஆவணி மாதம் பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப்பத்திரத்தைப் பெற்றதுடன், தமிழ்ப் பாலபண்டித பரீட்சையிலும் சிறப்பாகச் சித்தியெய்தினர்.

**ஆசிரியப்பணி :**

பயிற்சி முடிந்ததும் சிறுப்பிட்டி சைவவித்தியாசாலையில் ஆசிரிய நியமனங் கிடைத்தது. தம் உடன் மாணுக்கரும் உற்ற நண்பருமாகிய திரு. சி. கா. தம்பையா அவர்களுடன் சேர்ந்து, ஈராண்டுகள் அங்கு கல்விப்பணி புரிந்த பின்னர், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு மாற்றம் பெற்றுச் சென்றனர். அங்கு எஸ். எஸ். சி. வகுப்புகளிலும், ஆசிரிய தராதரப்பத்திர வகுப்புகளிலும் ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புகளிலும் தமிழ்மொழி, வரலாறு முதலிய பாடங்களை அயராது கற்பித்து வந்தார்.

அங்கு இந்துப்போட் (சைவவித்தியா விருத்திச் சங்கம்) தொடங்கி நடாத்திய சைவ ஆண்கள் விடுதி, சைவப் பெண்கள் விடுதி முதலியவற்றின் சீரமைப்புக்காக மனேஜரவர்களுடன் சேர்ந்து பாடுபட்டார். அவ்விடுதிகளிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிக் கல்வி கற்ற பெரும்பாலான அநாதைக் குழந்தைகளுக்கு உற்சாக மளித்ததோடு, அவர்களின் உடல்நலம், உள்ளவளர்ச்சி ஆகியவற்றை நன்கு பேணினுர்.

அங்கிருந்துகொண்டே பண்டிதமணி அவர்களிடம் தமிழை மேலுங்கற்று, 1937-ம் ஆண்டில் மதுரைத்தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டித பரீட்சையிற் சித்தியெய்தினுர் தருக்கவியலில் முதற்பரிசும் பெற்றுர்.

பிற்காலத்தில் இவர் கோப்பாய் சரவணபவானந்த. வித்தியாசாலே, ஏழாலே விக்கினேஸ்வர வித்தியாசாலே இரண்டிலும் உதவி ஆசிரியராகவும்; கெருடாவில் சைவ வித்தியாசாலே, நீர்வேலி ஆர். சி. பாடசாலே இரண்டிலும் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

**இல்வாழ்க்கை :**

1942 இல் இவருடைய திருமணம் நிறைவேறியது. வாழ்க்கைத் துணேவியாக வாய்த்தவர் நெடுந்தீவுக் கிராமத்தில் இருமரபுத் தூய தனிநாயக முதலியார் வழியில் வந்தவர். ஆரம்பக் கல்வியைச் சொந்த ஊரிலும், ஆசிரியப் பயிற்சியைச் சுன்னுகம் இராமநாதன் கல்லூரியிலும் பெற்று நல்லாசிரியையாய விளங்கியவர்; பண்டிதை சத்தியதேவி அவர்கள்

இல்லறம் நல்லறமாக நடைபெற்றது. மங்கலம் மிக்க அவர் மணவாழ்க்கையின் சின்னமாக நன்மக்கள் மூவர் கிடைத்தார்கள். இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, விநாயகலிங்கம் என்னும் மூன்று பிள்ளைகளும் சைவப்பண்பும், தூய-அடக்கமான கிராமச் சூழ்நிலேக்கேற்ற வாழ்வும் உடையவராய் வளர்ந்தனர். பெண்பிள்ளைகள் இராமநாதன் கல்லூரியில் பயின்று, பேராதனேப் பல்கலேக்கழகத்தில் B. A. பட்டம் பெற்றனர். புதல்வர் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் படித்துப் பேராதனேப் பல்கலேக் கழகத்தில் பொறியியற் பட்டதாரி ஆனுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி பக்தியும் அகில இலங்கைக் காந்தீய சேவாசங்கமும், தேசப்பற்றும், மொழிப்பற்றும் நிறைந்த பண்டிதரவர்களின் உள்ளத்தை, மகாத்மாகாந்தியின் தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திரப் போராட்டம் மிகவும் கவர்ந்தது. காந்தியடிகள் மக்கள் முன்வைத்த அஹிம்சை, சத்தியம் என்னும் இரு முக்கிய அறப்பண்புகளும் இவருடைய ஆத்மீக விடாயை மேலும் வளர்த்தன. காந்தீய—சர்வோதயக்கருத்துக்களைப் பின்பற்றி, அனைவரின் மேம்பாட்டுக்காகப் பாடுபடவும், எளிமையான — ஆடம்பர மற்ற வாழ்வு வாழவும் தம் பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்தார். மற்றப் பிள்ளைகளிடமும் இவற்றைப்பரப்பினுர். இவருடைய நன்மாணுக்கர்கள் பலர் காந்தீய வழியில் வாழ்ந்தார்கள். அவருள் ஒருவரான திரு. சி. க. வேலாயுதபிள்ளையவர்கள் காந்தீய தத்துவங்களைப் பரப்புவதற்கும், அவற்றைச் செயல்முறைப்படுத்துவதற்கும் அகில இலங்கைக் காந்தீய சேவாசங்கத்தை 1949-ம் ஆண்டில் ஆரம்பித்தார். அதன் அங்குரார்ப்பண தலைவராகப் பண்டிதர் அவர்கள் பணியாற்றி நெறிப்படுத்திஞர். "காந்தீயம்" பத்திரிகை ஆரம்பிக்கவும் சர்வோதய ஆசிரமம் தொடங்கிப் பனை தொழில் ஆராய்ச்சி நடாத்தவும் பாடுபட்டார்கள். சங்கத்தின் சார்பில் நீர்வேலி, பண்ணுகம் போன்ற இடங்களில் இரு பெரிய சர்வோதய மகாநாடுகள் நடத்துவதற்குப் பேருதவியாக இருந்தார். இந்திய அறிஞர்கள் பலர் வருகை தந்து நீர்வேலியில் தங்கியிருந்தார்கள் — தவத்திரு குன்றக்குடி அடிகளார், சர்தார் வேதரத்தினம்பிள்ளை, சங்கரராவ்தேவ் போன்ற பேரறிஞர்களுடன் பழகும் வாய்ப்புங்கிட்டியது. தவத்திரு குன்றக்குடி அடிகளாரைப் பண்டிதர் தமது சற்குருவாக மதித்து வாழ்ந்தார்.

1951-ம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நான்காந் தமிழ் விழாவில், தொண்டர் படைக்குத் தலைமை தாங்கி இவர் ஆற்றிய பணிகள் யாவர் மனத்தையுங் கவர்ந்தன. ஹண்டி - பேரின்பநாயகம், முதலியார் சின்னத்தம்பி, கலைப்புலவர் நவரத்தினம், வித்தியாலய அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகைபாகன் முதலான நல்லறிஞர்களோடு இவருக்குத் தொடர்பு உண்டாயிற்று.

1956 இல் காஞ்சீபுரத்திலும், 1957 இல் கேரளமாநிலத்திலுள்ள காலடியிலும் நடைபெற்ற சர்வோதய மகாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதிகளுடனும், குடும்பத்தாருடனும் இவர் கலந்து கொண்டார். ஆச்சாரிய விநோபாபாவே, இராஜேந்திரபிரசாத், குமரப்பா றி, ஜவஹர்லால்நேரு, ராஜாஜி, அரியநாயகம் போன்ற பெரியோர்களின் ஆசியுங் கிட்டியது.

இவற்றினால் காந்தீய நெறிகளையும், சைவப்பண்பாட்டினையும் பேணுவதில் இவருக்கிருந்த ஆர்வம் வலுப்பெற்றது. ஏற்கனவே 1953-ம் ஆண்டிலிருந்து, தம்மனைவியார் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களையும் தமிழ்ப்பணியிலும், சமயப்பணியிலும், காந்தீய-கிராமப்புனருத்தாரண இயக்கங்களிலும் ஈடுபடுத்திவந்தார். 1963-இல் தம் அன்னையின் மறைவு வரை இருவரும் இப்பணிகளில் சிறப்புடன் ஈடுபட்டனர்.

**யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்**

எமது பண்டிதர் அவர்களின் பணி யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திலும் தொடர்ந்து நடைபெற்றது. கீழைத்தேசக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் தமிழ்மொழி, வடமொழியாகிய இரண்டையும் வளர்த்தல், படித்தவர்களுக்குப் பரீட்சைகள் நடாத்திப் பட்டம் வழங்குதல், தமிழிலும் வடமொழியிலும் ஆராய்ச்சிகள் – மகாநாடுகள் நடத்துதல் முதலிய நோக்கங்களை முன்வைத்து அச்சங்கம் உழைத்து வருகிறது.

1959 ம் - ஆண்டு தொடக்கம் (இடையில் இரண்டு ஆண்டுகள் நீங்கலாக) தம் இறுதி மூச்சுவரை அதன் துணைச் செயலாளராகக் கடமையாற்றினார். வடமாநிலக்கல்விப்பணிப்பாளர்கள், கல்வியதிகாரிகளின் உதவியுடன் தமிழ்ப் பண்டித, பாலபண்டித வகுப்புக்களை நடாத்தினர். பலர் படித்துப் பட்டம் பெற்று ஆசிரியராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைச் சாகித்திய மண்டலம்:**

1964-65-ம் ஆண்டுகளில் இலங்கைச் சாகித்திய மண்டல அங்கத்தவர் பதவி இவருக்குக் கிடைத்தது. சாகித்திய மண்டல வெளியீடான "கலைப்பூங்கா" இதழின் இணையாசிரியருள் ஒருவராகவும் அக்காலத்தில் கடமையாற்றினர். சாகித்திய மண்டலத்தின் சார்பில் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் பதிப்பித்த ஈழத்துக் கவிதைக் களஞ்சியம் என்னும் நூலினைத் தொகுப்பதிலும் பெரும் பங்களிப்பைச் செய்தார்.

**உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு:**

அறிஞர் அண்ணுவின் ஆட்சிக்காலத்தில் சென்னை மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளுள் ஒருவராக இவரும் கலந்து கொண்டார்கள்.

**மருமக்களும் பேரக்குழந்தைகளும்:**

1975ம் ஆண்டு தமது மூத்த புதல்வியின் திருமணத்தை இனிது நிறைவேற்றினர். முதல்மருகராக வாய்த்தவர் புகையிரத நிலைய அதிபர் திரு. த. குணலிங்கம் அவர்கள். பின்னர் இளைய புதல்விக்குக் கணக்காய்வு அத்தியட்சகர் திரு. வே. கந்தசாமி அவர்களை மணமகனுகத் தேர்ந்தெடுத்தார். வீட்டுக்கு மருமகளாக வந்தவர் பட்டதாரி ஆசிரியை சு. இரதிதேவி அவர்கள். நற்குணம் வாய்ந்த மருமக்களைப் பெற்றமையால் அவர் மிக்க மகிழ்ச்சியுற்றிருந்தார். மக்களின் இல்லற வாழ்வுக்கு மிக்க உறுதுணையாயிருந்த அவருக்கு பாமினி, சேயோன், முகுந்தன் என்னும் பேரக்குழந்தைகள் மூவரையும் இறைவன் கொடுத்தான்.

**குணஇயல்புகளுட் சில:**

பண்டிதர் அவர்கள் பிறர் பொருளைத் துளிகூட விரும்பாதவர். அவர் பொதுப்பணிகளில் ஈடுபட்ட பொழுதெல்லாம் பட்டம் பதவிகளையோ, சுயநலத்தையோ விரும்பாது 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் வாசகத்துக்கும், 'பயனிற் பற்று வைக்காது பணிகளைச் செய்' என்ற கீதை வாசகத்துக்கும் இலக்கியமாக நடந்து கொண்டார்.

தாம்செய்யும் பணியை இன்னொருவர் சரியாக நேர்மையோடு நிறைவேற்றுவார் என்று கண்டால், அதை அவரிடம் மகிழ்ச்சியுடன் ஒப்புவித்துவிட்டுத் தாம் வேறொரு பணியை நாடிச்செல்வது இவர் வழக்கமாயிருந்தது.

தம்மனைவி மக்களாயினும், உறவினராயினும், நண்பராயினும், பிறராயினும் சரி அவர்களிடம் பிழை காணப்பட்டால் உடனே பண்டிதரவர்கள் 'விறன்மிண்டராக, மாறிவிடுவார். தவறுகளைச் செய்வதும், அவற்றை அங்கீகரிப்பதும் கடவுளுக்குச் செய்யும் பெருந்துரோகம் என்பது இவர் கொள்கை. "கடவுளுடைய வேலை முட்டின்றிச் சரியாக விரைவாக நடைபெறவேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் தன்கடமைகளைச் சோர்வின்றிச் செய்து ஒத்துழைப்பு நல்கவேண்டும்' என அடிக்கடி கூறுவார்.

"உலக வாழ்வு நிலையற்றது எனினும் உலக வாழ்வின் மூலம் மனிதன் சாதிக்கும் அன்பு நிலையானது. வரம்புக்குட்பட்ட வாழ்க்கையும், உண்மையும், நீதியும், அன்புச் சாதனைக்கு உறுதுணையானவை; குடும்பம் என்ற மையப் புள்ளியில் தொடங்கி உலகம் என்ற பெரிய வட்டம் வரை பேதமற்ற அன்பினையும், ஆன்மநேய ஒருமைப் பாட்டினையும் வளர்க்க வேண்டும்" என்பது அவர் சித்தாந்தம்.

'பகையும் வெறுப்புணர்ச்சியும், முரண்பாடும் சுயநலத்தாலும் - அகந்தையாலும் ஏற்படுவன. இவை மனித குலத்தின் பெலவீனங்கள்' என அறிவுரை கூறுவார்.

முடிவுரை

பண்டிதரவர்கள் தம்வாழ்வின் இறுதிப் பகுதியிற் பலநற்காரியங்களைச் செய்ய எண்ணியிருந்தார். மக்களுடன் மருமக்களும் பேரக்குழந்தைகளும் அவர்மீது அன்பைச் சொரிந்தார்கள். மனைவியார் தமது ஆசிரியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியிலிருந்து இளைப்பாறி அவருக்கு ஆறுதலளிக்க நினைத்திருந்தார். சிறிய தந்தைமாரின் புதல்வர்கள், மைத்துனர்கள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள், இளைஞர்கள் அவர் தொடங்கும் பணிகளிற் தோள்கொடுக்கக் காத்திருந்தார்கள். எல்லாவற்றையும் மற்றவர்கள் செய்யலாமென்ற திருப்தியுடன், பள்ளத்தை நாடிச் செல்லும் வெள்ளம்போல் அவரது ஆத்மா இறைவன் திருவடி நிழலை விரைவாக நாடிச் சென்றது.

தமது இருவடி நீழலில், பண்டிதர் அவர்களின்
ஆன்மா சற்று ஓய்வு பெற வேண்டுமென்பது
எம்பெருமானின் விருப்பம் போலும்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# ஓவியம் பேசாது

"சர்மா", நீர்வேலி.

அன்பு பண்பு அறிவு அடக்கம்
ஆற்றல் ஆர்வம் அவரது உருவம்
இவரது தொண்டால் உயர்ந்தவர் பலபேர்
ஈழத்தில் இவர்பணி என்றும் மறவார்
உறுதியான கொள்கை உடைய ராய்
ஊரார்போற்றும் உயர் கல்விமா னாய்
எல்லோருக்கும் தான் கற்ற கல்வியை
ஏத மிலாது புகட்டிய செம்மல்
ஐக்கிய வாழ்வே அனைவர்க்கு முயர்வென
ஒற்றுமை உணர்வை உளத்திற் கொண்டு
ஓயா துழைத்த உயர்பெரு மகனாய்
ஔவியம் பேசாது ஆக்கம் புரிந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# உள்ளப் பிரிவும் பழைய நினைவும்

கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

'உவப்பத் தலைக்கூடி' யென்ற வள்ளுவரில் வரும் 'உள்ளப் பிரிவு' பண்டிதர் திரு. செ. துரைசிங்கத்தின் பிரிவு, ஆற்ற ஒண்ணாத பிரிவு.

திரு. துரைசிங்கத்தில் எத்துணைப் பாசம் எனக்கிருந்ததோ, அத்துணைப்பாசம், நாவலர் தமையனார் புத்திரரும் நாவலர் பாடசாலை மனேஜருமான ஸ்ரீமத். த. கைலாயபிள்ளை அவர்கள் என்பால் வைத்திருந்தார்கள்.

அவர்கள், 1934-ம் ஆண்டாயிருக்கலாம், ஒருநாள் என்னிடம் பிரபலஸ்தர் ஒருவர் தமக்கெழுதிய கடிதத்தைத் தந்தார்கள்.

அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது :- நாவலர் பாடசாலைப் பொறுப்பை, அஃதாவது மனேஜர் பதவியை, பண்டிதர் சி. கணபதிப்பிள்ளையிடம் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் அவர் நீர்வேலியில் உள்ள துரைசிங்கம் என்ற பையருக்குக் கொடுத்து விடுவார் என்பது. அதைப்படித்து நான் ஆச்சரியப்படவில்லை.

1936-ல் தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் என்கின்ற மும்மொழிக் காவியப் பாடசாலையொன்று திருநெல்வேலியில் திறம்பட நடந்தது.

என். எம், பெரேராவும், அவர் சகாக்களும் அப்பாடசாலையைத் தரிசித்து, 'சிங்களர், தமிழும் தமிழர் சிங்களமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கவேண்டுமென்ற கொள்கையைப் பெரிதும் பாராட்டி ஒரு நாள் முழுதும் தங்கிப் பிரசாரமும் செய்து சென்றூர்கள்.

நூல் நூற்றல், நெசவு என்றின்னேரன்ன எத்தனையோ திட்டங்கள் அங்கே நடைபெற்றன.

பாரிய தோட்டம், நினைக்க முடியாதது. இலை வகைகளில் பதினைந்து வகைக்கு மேலிருந்தன. அங்கே வரும் பிரமுகர்களின் மோட்டார் இரதங்களில் காய்கறிவகை நிரப்பப் பட்டுவிடும்.

பலவேறுபட்ட எத்தனையோ திட்டங்கள், நினைத்த மாத்திரத்தில் நிறைவேறின.

திட்டங்கள் அனைத்துக்கும் உயிர்நாடியாய் மூச்சுவிட நேரமின்றி உழைத்த பெருமகன் பண்டிதர் திரு. செ. துரைசிங்கம்.

நல்ல காரியங்கள் அனைத்திலும் முதன்மை அவருக்கே உரியதாயிருந்து வந்தது. என் இருதயம் அவருக்கே முதன்மை அளித்து வந்தது.

இப்பொழுது இறுதியாத்திரையிலாவது, அவரை முந்திக்கொள்ள முடியவில்லை. பிந்தியிருந்து பிரிவுத்துயருக்கு இருப்பிடமாயிருக்குநிலை நேர்ந்துவிட்டது.

விதியின் விளையாட்டை யாரறிவார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் துரைசிங்கம் :
# : ஒரு தீர்க்கதரிசி

திரு. இ. மாணிக்கவாசகர் அவர்கள்
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்களை நான் நெடுங் காலமாகவே அறிவேன். ஓர் ஆசிரியனாகவும், அதிபராக வும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் செயற் துடிப்புள்ள ஓர் அங்கத்தினனாகவும், உதவிச் செயலாளரா கவும் அவரை நான் அறிந்திருந்தேன். வடமாநிலக் கல் விப் பணிப்பாளர் என்ற ரீதியிலும், பதவி வழியினால் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் என்ற ரீதியிலும், நான் அவருடன் பழக ஏற்பட்ட சந்தர்ப்பங்கள், அவரின் பெருமையை உணர எனக்கு மேன்மேலும் வழி சமைத்தன.

அவரின் இங்கிதமான சுபாவம் என்னைப் பெரிதும் கொள்ளை கொண்டது. அவர் இறைவனடி சேர்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புகூட - ஒரு ஞாயிற்றுக்கிழமை யென்று நினைக்கின்றேன். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க அலுவல்களின் நிமித்தம் என் வீட்டுக்கு வந்திருந் தார். நான் சற்றுச் சுகவீனமாக இருந்ததால் ஓய்வெடுத்து உறங்கிக் கொண்டிருந்தேன். எனது துணைவியாரிடமிருந்து செய்தியை அறிந்த அவர், என்னைச் சிரமப்படுத்தாது திரும்பிச் சென்று, மீண்டும் அடுத்த வாரமளவிலே என்னை வந்து சந்தித்தார். இதையறிந்தபோது அவர்மேல் எனக்கிருந்த பற்று மேலும் உயர்ந்தது.

அவரின் இங்கிதமான சுபாவத்திற்கு இதைப்போல், இன்னும் எத்தனையோ சம்பவங்களைச் சொல்லலாம். அவரின புதல்விகளிலொருவர் எனது நிர்வாகத்தின்கீழ் சற்று வசதிக் குறைவான இடத்தில் கடமையாற்றியபோது கூட, அவர் அதைப்பற்றி எனக்கு முறையிடவோ, சலுகை கேட்கவோ இல்லை. நான்தான் பேச்சுவாக்கில் அதை அறிந்து, அந்த வசதிக்குறைவைப் போக்கினேன். இப்படி எத்தனை எத்த னையோ சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆழ்ந்த மொழிப்பற்றும், சமயப்பற்றும் வாய்ந் தவர். அவர் பொதுவாழ்வில் பிரவேசித்த காலந் தொட்டே ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் இயங்கும் உறுப்பினருகப் பணியாற்றி வந்தார். பண்டித பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடாத்தினர். கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை வினக்களைத் தெரிவுசெய்யும் குழுவில் ஒருவராகக் கடமையாற்றினர்.

இவர் ஒரு காந்தீயவாதி, சுதேச கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதில் நாட்டம் கொண்டவர். காந்தீய சேவா சங்கத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டவர். இன் றைக்கு இருபது, இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே இந்த முயற்சிகளில் முன்நின்று உழைத்தவர்களில் முக்கிய மானவர். பனையை அடிப்படையாகக் கொண்ட கைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராமீய பொருளாதாரத்தை வளப்படுத்தலாமென நம்பியவர். அதற் காக மகாநாடுகளையும், பயிற்சிக் களங்களையும் நடாத்தி தன் கைப்பொருளைக்கூட அதற்காகச் செலவிட்டவர். இந்தவகையில் இவர் ஒரு தீர்க்கதரிசி என்று கூடச் சொல்லலாம். அவர் அன்று தொடங்கிய முயற்சிகளில், இன்று அரசாங்கமே அக்கறை கொண்டுள்ளது.

இவரின் வாழ்க்கை ஒரு நிறைவாழ்க்கை எனலாம். 'காதலன் ஒருவன் கைப்பிடித்து அவன் காரியம் யாவி னும் கைகொடுத்த' சத்தியதேவி என்னும் சகதர்மினி; இரண்டு மகளும் – ஒரு மகனுமாய் மூன்று புத்திரச் செல் வங்கள்; தான் கொண்ட கொள்கையிற் தளராத பற்றுறுதி; மனிதனை மனிதனுக மதிக்கும் மாண்பு; தொலைதூர நோக் கோடு கூடிய தீர்க்கதரிசனம்; இங்கிதம்; இடைவிடாத இயக்கம்.

ஆம்! அத்தனையும் நிரம்பிய பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். ''மரணம் இயற்கை-மரணம் உண்மை" என்று, அவர் பிரிவால் வாடுகின்றவர் களுடன் சேர்ந்து நாமும் மனதைத் தேற்றுவோம். அவரின் ஆன்மா ஈடேற்றத்திற்காக இறைவனைப் பிரார்த்திப்போம்.

*11-12-79*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி இறைவரினும் அஞ்சாதார்

திரு. இ. சிதம்பரப்பிள்ளை அவர்கள்
"சிற்சபேசன் இல்லம்" நீர்வேலி.

செந்தமிழ்க்குந் தெய்வத் திருப்பணிக்குந் தன்வாழ்வின்
அந்தமள வும்பணிசெய் ஆண்டகையை—சிந்தையிலே
தொல்லுலகம் போற்றுந் துரைசிங்கம் பண்டிதரை
இல்லையில்லைக் காண்பதற்கு இன்று.

சித்தார்த்தி கார்த்திகையிற் சேர்பூர்வ பஞ்சமியில்
இத்தா ரணிதிகைக்க எம்பெருமான் - சித்தம்
பணியுந் துரைசிங்கம் பண்டிதனுர் சென்ருர்
அணிதில்லை வாணன் அரங்கு.

நீதி இதுவென்று நெஞ்சிற் பதித்துவிட்டால்
ஆதி இறைவரினும் அஞ்சாதார் - ஆதிபதம்
நீங்காதே பண்டிதனுர் நேயம் மிகப்பெற்ருர்
தூங்காதே தூங்கும் சுகம்.

'சங்கம்' 'தமிழ்'என்று தங்காது ஓரிடத்தில்
எங்குஞ் சுழன்று இளைத்திளைத்து - கங்குல்பகல்
தொண்டு புரிந்த துரைசிங்கம் பண்டிதர்போல்
உண்டென் றுரைக்கயார் உண்டு.

பண்டிருந்த வீட்டின் பழநினைவால் பண்டிதனுர்
உண்டிருந்த வாழ்வை உதறியுற்ருர் – வண்டார்
அணிகொண்ட கொன்றை அலங்கலணிந் தாடும்
மணிகண்டன் வாழும் மனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பேர் எதிர்த்தாலும் . . .

ஆக்கம்:- வித்துவான் சி. ஆறுமுகம், ஆசிரியர், அவர்கள்

நீர்வேலித் துரைசிங்கம் நெல்வேலிப்
பண்டிதநன் மணியின் வார்த்தை
நேராக ஏற்றமர்ந்து நிறைகல்வி
கற்றுயர்ந்த நிபுணன் கண்டீர்!
காரியவான் கடமையொடு கண்ணியமும்
கட்டுப்பாட் டுடனே காத்த
சீராளன் மாணவரும் நண்பர்களும்
செல்வமென மதித்த சிங்கம்! 1

காந்திவள்ளல் கண்டவழி ஒன்றதுவே
நின்றுலகைக் காக்கும் என்றே
சாந்தியுடன் பணிபுரிந்தோன் சமதர்ம
நிலைநின்ற தக்கோன் கண்டீர்
வேந்தனென வாழ்ந்துநின்றோன் மெய்யடியார்
திருத்தொண்டின் மேன்மை நாடி
மாந்தர்தொழத் தெய்வீக நிலையங்கள்
அமைத்துநின்ற மகிபன் கண்டீர்! 2

என்றுமுள செந்தமிழும் ஆரியமும்
இனிதோங்கி வளர எண்ணி
அன்றீழத் தமிழறிஞர் "ஆரியதிரா -
விடபாஷா பிவிருத்திச் சங்கம்"
நன்றமைத்துப் பணிபுரிந்தார் அவர்கண்ட
நல்வழியில் நாளும் நின்றே
மன்றமதன் சுமைதாங்கி வாழ்வெல்லாம்
தமிழ்மரபு வளர்த்த சிங்கம்! 3

சொற்சுருங்கச் செயல்விரித்த சுகுணன்எங்கள்
துரைசிங்கம் தமிழைக் கற்ற
விற்பனர்கள் பண்டிதர்கள் விளங்குபல
துறைபுகுந்தே ஆய்வு செய்தே
கற்பனவுங் கற்றுயரச் சங்கத்தின்
வழிநின்று கடமை ஆற்றி
அற்புதநற் பணிபுரிந்தான்! அறங்காத்த
வள்ளுவர்நூல் ஆழங் கண்டோன்! 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தினொடு சொற்குமட்டும் இலக்கணம்நூல்
எழுதியவர் ஏக்கங் கொள்ளத்
தொழத்தகுசீர்த் தொல்காப்பியன் தந்தநூல்
திறனுணர்த்தும் தீரன் கண்டீர்!
அழுத்தமுடன் கற்றுயர்ந்தோன் திருத்தமுற
எழுதவல்ல நல்ல ஆசான்!
பழுத்தமனத் திருத்தொண்டர் பதம்போற்றிச்
சிவநெறிநற் பண்பில் வாழ்ந்தோன்! 5

ஆயிரம்பேர் எதிர்த்தாலும் அறமென்று
உணர்ந்ததனை முடிக்கும் ஆற்றல்
மேயவனெம் துரைசிங்கப் பண்டிதன்காண்
நாவலனார் வீர வாழ்வின்
தூய்மைதனை யுலகறியத் துலங்கவைக்கும்
குருமணிதன் தொண்டைப் பேணித்
தாயனைய பேரன்பால் பண்டிதர்கள்
துயர்களைந்த தந்தை கண்டீர்! 6

சத்தியநற் றேவிதுணை கொண்டறிவு
அறிந்தமக்கள் மூவர்ப் பெற்றே
முத்தனைய பேரர்தம் மழலைமொழி
யமுதருந்தி முதிர்ந்த அன்புப்
பத்திநெறி உணர்ந்துயர்ந்த பாவலரும்
நாவலரும் பரவ வாழ்ந்தே
வித்தகனார் திருவடிகள் மேவினனெம்
துரைசிங்கம் விண்ணும் போற்ற! 7

செந்தமிழின் மரபோங்கச் செய்தொண்டால்
உடல்நலமும் தேய்ந்த போதும்
சந்தனமென் குறடதுபோல் தனிவாழ்வு
வாழ்ந்துநின்ற தமிழா! நாளும்
கந்தனடி கைதொழுது கணபதியின்
கழல்பணிந்து கருமம் ஆற்றிச்
சந்ததமும் சங்கத்தைத் தாங்கினையே
இனியெவர்தாம் தாங்க வல்லார்! 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வேலி தனித்ததுவே! நெல்வேலிக்
குருதேவும் நெஞ்சம் நொந்தார்!
ஆர்வமொடு நினையுணர்ந்த அறிஞர்களும்
கண்ணீர்வெள் ளத்துள் ஆழ்ந்தார்!
சேர்மனையாள் செல்வமக்கள் திகைத்துநின்றார்
எண்டிசையும் திகழும் நல்ல
பேர்பரவும் மாணவர்கள் கலங்கிநின்றார்
பெரும் பிரிவை யெண்ணி. 9

சங்கத்தின் மண்டபமுன் சால்புணர்த்தும்
ஆராய்ச்சிக் கழகம் தக்கோய்!
எங்குமுள அறிஞர்குழாம் நினையெண்ண
ஏற்றபணி என்றும் செய்யும்!
துங்கமுறு நூற்பதிப்பு தூயோய்நின்
உள்ளத்தின் தோற்றம் காட்டும்!
சங்கரனார் திருவருளால் நின்னுயர்ந்த
கனவுநன வாகும்! சாந்தி! 10

---

# அகர வரிசையில் அமரரின் குணங்கள்

**பண்டிதர் R. K. முருகேசு அவர்கள்**

அயரா அன்பின் திருவுருவமாக அவனியில் வாழ்ந்த அற்புதமனிதர்
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் சகலதுறைகளிலும் தழைத்
தோங்க அயராதுழைத்த ஆற்றல்சால் ஆசிரியன்,
இன்முகங்காட்டி இன்சொல் பேசும் இனியவர்.
ஈகையில் பாரியெனப்பலரேத்த வாழ்ந்த பரோபகாரி.
உண்மையேபேசி நன்மையே பலருக்கும் செய்த உத்தமர்.
ஊருக்குப் பேராக வாழ்ந்துகாட்டிய ஊருணி.
எடுத்த கருமத்தை எளிதிற் சாதிக்கும் சாமர்த்தியசாலி,
ஏழை பங்காளன் எவரினதும் அன்பாளன்.
ஐங்கரன் திருக்கோயில் (வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோயில்)
திருப்பணிகளில் அல்லும் பகலும் பாடுபட்ட அருந்தொண்டன்.
" ஒன்றே குலம், ஒருவனே தேவன் " என்ச் சாதனையில் வாழ்ந்து
காட்டிய ஒப்பற்ற பண்பாளன்.
ஓர்மம் மிக்க ஒப்புயர்வற்ற ஒருதனிப்பிறவி,
ஔவை அருளிய அறவழியில் வாழ்ந்த அருங்குணக்குன்று.

---

# நண்பர்
# பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள்

திரு. இ. கந்தையா அவர்கள்
தலைவர்: அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்

மதிப்புக்குரிய நமது நண்பர் பண்டிதர் துரைசிங்கம் அவர்களின் மறைவு, காத்திராமல் நடந்துவிட்டது. பொதுக் கருமங்களை முன்னிட்டுக் கொழும்பு செல்லுவதற்கு எம்முடன் பயணமாகத் தீர்மானித்துச் சென்ற அன்பு நிறைந்த பண்டிதரின் கடிதம், வரவசதியில்லை எனக்கிடைத்த அடுத்தநாள் கொழும்பில் அவரது மரணச்செய்தியும் எட்டும்எனச் சிந்திக்க முடியவில்லை. இன்று இருந்தார், நாளை இல்லை; என்னும் பெருமையுடைய உலக வாழ்க்கையின் இயல்பிற்கு பண்டிதரும் பணிய வேண்டியதாயிற்றுப் போலும் - இறைவன் சந்நிதியன்றி எவர்க்கும் பணிந்தறியாத பண்டிதரும் மறைந்து காலன் வசமாயினர்.

சைவவித்தியா விருத்திச் சங்கம் தனது பொற்காலத்தில் தயாரித்துச் சைவத்தமிழ் மக்களுக்கு அளித்த நல்லாசிரிய மணிகளுள் பண்டிதர் துரைசிங்கம் அவர்களும் ஒருவர். சைவத்துக்கும், தமிழுக்கும் மாத்திரமல்ல, சமூகத்திற்கும் நாட்டுக்கும் வேண்டிய பல தொண்டுகளையும் சிறப்பாகச் செய்து வந்துள்ளார். திருநெல்வேலியில் இளைஞராக ஆரம்பித்த நல்ல பணிகளையெல்லாம் நீர்வேலியில் இல்லறத்துணைவியாகப் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களுடனும், பிள்ளைகளுடனும் வாழ்ந்து இறுதி மூச்சு வரை தன்னாலான தொண்டுகளையெல்லாம் களைப்பின்றிச் சலிப்பின்றிச் செய்து இறைவன் திருவடி எய்தினார் என்று கூறுதல் மிகையல்ல.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் 1949-ல் ஆரம்பமாயிற்று - இந்திய தேசீய இயக்கங்களின் மனப்படிவுகளாலும், காந்தீய - சர்வோதய நெறிமுறைகள் பரவுதல் மூலமாகச் சீரழிந்து கிடக்கும் கீழைத்தேசக் கலாச்சார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய வாழ்க்கை முறைகளும், சிறந்த நோக்கங் களும், மக்களின் பண்பும், ஒழுக்க நெறிகளும், தலைதூக்கி நமது மக்கள் சாந்தியும் சமாதானமும் பெற்றுவாழ லாமென அக்காலத்தில் சிந்தித்த பல காந்தீய வாதிகளுள் பண்டிதர் துரைசிங்கமும் ஒருவராவர். யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் விழாக்காலங்களில் நீர்வேலி வாழைக்குலை களையும், வாழையிலைகளையும் வாரி வழங்கி, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கிய கலைப்புலவர் நவரத் தினம், ஈழகேசரி பொன்னையா, திரு ஹண்டி பேரின்ப நாயகம், முதலியார் சின்னத்தம்பி, திரு.ச. அம்பிகைபாகன் போன்ற தமிழ்ப் பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்ற பண்டிதர் துரைசிங்கம் ஆரம்ப காலங்களிலிருந்தே தமிழ்மொழி வளர்ச்சியிலீடுபட்டதுடன் அமையாது காந்தீய - சர்வோதய இயக்கங்களிலும் ஈடுபட்டுப் பெருந் தொண்டாற்றி வந்தார். காந்தி சேவா சங்கச் செயலாளராகவும், பொருளாளராகவும் சிறந்த சேவை களாற்றிய பண்டிதர் துரைசிங்கம் அவர்கள் பல காலம் நிர்வாகசபை அங்கத்தவராகவும் இருந்து தமது கருத் துக்களை உதவிப் பெரும் சேவை ஆற்றியுள்ளார்கள். இறக் கும் பொழுதும் அவர் காந்தி சேவா சங்க உப - தலைவ ராகப் பெரும் பணி புரிந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இலங்கையில் தமிழும் சமஸ்கிருதமும் வளர வேண்டு மெனப் பெரிதும் விரும்பிய தமிழ் அறிஞர்களால் ஸ்தா பிக்கப்பட்ட ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க உப காரியதரிசியாகவும் பலகாலம் பணியாற்றி, பிரவேசபண் டித, பால பண்டித, பண்டித வகுப்புகளைத் திறம்பட நடத் தியும், பரீட்சைகளை நல்ல முறையில் நிர்வகித்துப் பலரும் மெச்ச மறுமொழிகளை வெளிப்படுத்தியும், ஆராய்ச்சி விரி வுரைகளை ஒழுங்கு செய்து தமிழ் அறிஞர்களை ஒன்று கூடச்செய்தும் அவர் ஆற்றிய தொண்டுகள் கணக்கில் அடங்காதவைகளாகும்.

காந்தி சேவா சங்கப் பணியாக, 1953-ல் நீர்வேலியில் முதலாவது சர்வோதய மகாநாடு நடைபெற்றபோது சங்கரராவ்தேவ், சர்தார் அ. வேதரத்தினம், ஸ்ரீ. நா. இராமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பெரியார்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து உபசரித்த பெருந்தன்மையும், 1955-ல் இரண்டாவது சர்வோதய மகாநாடு பண்ணுகத்தில் நடந்த காலங்களில் தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரை யாழ்ப்பாணத்துக்கு எழுந்தருளச்செய்து, பெருங்கூட்டங்களை நடத்திய நாட்களிலும் பண்டிதர் துரைசிங்கம் அவர்கள் தம்பதிகளாக முன்னணியில் நின்று தமது உடலுழைப்புடன் சங்கத்துக்காகப் பெருந்தொகைப்பணமும் செலவுசெய்து உதவியமை இன்று சரித்திரமாகிவிட்டன. 1953-54ம் ஆண்டுகளில் காந்தி சேவா சங்கப்பணியாகப் பனைவெல்ல உற்பத்தியிலீடுபட்டும், 1956-ல் பனை மகோற்சவம் நடத்தியும் பண்டிதர் செய்த சேவைகளை நண்பர்கள் மறக்க முடியாது. 1957-ல் சிங்கள நண்பர்களையும், காந்தீய - சர்வோதய - சிரமதான அடிப்படையில் ஒன்று சேர்த்து நீர்வேலி - கைதடிப் பாதையையும், அதேகாலங்களில் நீர்வேலிக் கிராமத்திலுள்ள அச்செழு - கரந்தன் தெருவையும் சிரமதானம் மூலமாக காந்தி சேவா சங்கம் அமைத்தபொழுது பண்டிதர் துரைசிங்கம் முன்னணியில் நின்று உழைத்தமையை, அக்கால காந்திய - சர்வோதய அன்பர்கள் இன்றும் நினைக்கக் கூடியதாக உள்ளனர். 1958-ல் உருத்திரபுரத்தில் காந்தி நிலையம் அமைக்கப்பட்டபொழுதும், பின்னர் தருமபுரத்தில் கஸ்தூரிபாய் இல்லமும், அக்கராயனில் காந்திக் கிராமமும் காந்தி சேவா சங்கத்தாரால் ஆரம்பித்த காலங்களிலும் பண்டிதர் துரைசிங்கம் அவர்களும் ஒருவராக இருந்து உழைத்தார்கள். சைவமும், தமிழும் வளரக் காந்தீய சர்வோதயக் கருத்துக்கள் சிறந்து வளர வேண்டுமென்பது பண்டிதர் துரைசிங்கம் அவர்களின் பெருநம்பிக்கையாகும். அரசியலில் நேர் ஈடுபாடில்லாத நமது பண்டிதர் 'காந்தீய சர்வோதய நெறிகள்தான் எமது நாட்டுக்கு நல்ல வழி காட்டக்கூடும், என்று அடிக்கடி கூறுவார்.

நண்பர் பண்டிதர் துரைசிங்கம் அவர்கள் சிறந்த கர்மயோகியாவார். 'தமிழ் கற்ற பண்டிதர்கள் நல்ல தமிழாசிரியர்கள் மாத்திரமல்ல நல்ல கருமங்களையும் ஆற்றக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய சக்திவாய்ந்தவர்கள்' என்பதைப் பலரும் உணரச் செய்த பண்டிதருக்கு நிகர் அவரேதான். தாம் விரும்பிய விஷயங்களை மிகவும் துணிவாக எடுத்துக் கூறிவிடவும், அதைச்சாதிக்க எத்தகைய தியாகங்களைச் செய்யவும், உறுதியான மனமுள்ளவராக இருந்தார். சில விஷயங்களில் மிகவும் தீவிரவாதியாகவும், தனித்து நின்று போராடுபவராகவும் விளங்கினர், என்றுதான் கூறவேண்டும். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும், காந்தி சேவா சங்கமும் ஒரு சிறந்த செயல்வீரனை இழந்துவிட்டன. பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் ஒரு நல்ல பண்டிதரை, தமிழ்த்தொண்டனைக் காண இயலாது மனக்கஷ்டமடைகின்றனர். நீர்வேலி ஒரு சிறந்த மனிதரையும், குடும்பத்தார் நல்ல தலைவனையும் இழந்துவிட்டனர். நண்பர்கள், அன்பர்கள் பண்டிதரின் இன்முகத்தை இனிக்காண முடியாது என வருந்துகின்றனர். நல்லவனாகவும், வல்லவனாகவும் வாழ்ந்து, 'உவப்பத்தலைக்கூடி உள்ளப் பிரிந்த புலவனாகிய' பண்டிதரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி — சாந்தி — சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடாத சிந்தாமணியே

பண்டிதர் சி. இராசையா அவர்கள், அரியாலை

## கட்டளைக் கலித்துறை

வண்மைக்கும் நேர்மைக்கும் வாதம் புரிந்து நிமிர்ந்துநிற்கும்
திண்மைக்கும் தீராத ஆண்மைக்கும் செஞ்ஞா யிறுநிகர்தம்
உண்மைக்கும் ஓவா உழைப்புக்கும் நின்போல் ஒருவருண்டோ
நுண்மைப் புலங்கொண்டு நூல்பல ஆய்ந்திட்ட நுண்மணியனே.

வாடாத கற்பக மேயுள்ளம் வேண்ட விரைந்தளிக்கும்
கோடாத சிந்தா மணியே விளங்கக் கொளுத்திவைத்த
ஆடாத தீபமே ஆரப் பொழியும் கலைமுகிலே
தேடாத செல்வமும் சித்திக்கு மோநின்னைப் போலினியே.

எழுத்தோடு சொல்லும் பொருளும் எனச்சொல் லிலக்கணங்கள்
பழுத்தூறு சாறு பருகி மகிழ்ந்திட மாணவர்கள்
விழுத்தூய்மை உள்ளத்து வித்தக ஞக விளங்கிநின்ருய்
வழுத்தா தொருசொல் மறைந்தனை யேயென்ன மாயமிதே

யாழ்நகர் ஆரிய த்ராவிட பாஷாபி விர்த்திச்சங்கம்
காழ்பெற ஊன்றிய கோலாகி நின்ருய் கலையமுதம்
ஆழ்கட லாகத்து நுண்புல மீட்டுக் கடைந்துநல்ல
வாழ்வுற மாணவர்க் கீந்தாய் வடிவுகொள் வானவனே

இன்பழச் சாறு நுகரக் கனிந்த பழமிருக்கும்
நன்மரச் சோலையை நாடிப் பறக்கின்ற வாவல்கள்போல
நின்னிருக் கும்மிடம் நேடி வருகின்ற மாணவர்கள்
என்னினிச் செய்குவர் ஏந்தால் துரைசிங்க பண்டிதனே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்களின் பிரிவிரங்கல்

**சமாதான நீதவான், இளைப்பாறிய தலைமையாசிரியர்**
**திரு. செ. நடராசா அவர்கள்**

நாவலர் பெருமான் நல்லூரிற் பிறந்தவர், வண்ணூர் பண்ணையில் வாழ்ந்தவர், அவரது சிவப்பணியும் கல்விப் பணியும் அங்கேயே ஆரம்பமாயின. அதனால் அங்கே ஒரு நாவலர் கோட்டம் அமைந்தது.

சிவசங்கர பண்டிதர் சுன்னுகத்தில் பிறந்தவர். நீர் வேலியில் வாழ்ந்தவர். அவரது சமயப் பணியும் கல்விப் பணியும் இங்கேயே ஆரம்பமாயின. சிவசம்பந்தமும் கல்வியும் கலந்து மணம் வீசத் தொடங்கியது. அதனால் இங்கே ஒரு பண்டிதர் கோட்டம் அமைந்தது வியப்பன்று.

பண்டிதர் கோட்டத்தின் ஒரே எல்லையில் வடமேல் திசையில் உள்ளது. அமரர் பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் அவர்களின் வீடு. மாரிகாலத்து வெள்ளம் பண்டிதர் கோட்டத்திலிருந்து அந்த மண்ணைக் கரைத்து அயல் வீடுகளுக்கும் கொண்டு சென்று கலந்து விடும். கடைசியில் அந்த மண் வாசனை ஊர் முழுவதும் பரந்து விட்டது.

பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள் இந்த மண்ணில் பிறந்தவர். பண்டிதரின் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைப் படித்தவர். ஆசிரிய கலாசாலைக்குப் போகும் தகுதி ( S. S. L. C. ) வரையும் அந்த மகானின் பாடசாலையிலும் - அந்த வளவு மண்ணிலும் - உருண்டு புரண்டு ஓடி ஆடி விளையாடி வாழ்ந்தவர்.

திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை அவரை அழைத்தது. அங்கே நாவலர் கோட்டத்தின் கலாசாரங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியங்களும் அவரை ஆட்கொண்டன. நாவலர் கோட்டமும் பண்டிதர் கோட்டமும் கலந்த வாழ்க்கை அவருக்கு அங்கே கிடைத்தது. பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்களின் அரவணைப்பில் முழுகிப் போனார் - திரு. துரைசிங்கம் அவர்கள். பண்டித பரீட்சையிலும் தேறினார், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, சைவாசிரிய கலாசாலை, காவிய பாடசாலை ஆகிய மூன்றும் ஒரே வளவில் அமைந்த பெரிய கலாக்ஷேத்திரம். இந்தக் கலாலயங்களின் சுடர் விளக்காய் அமைந்தவர். பண்டிதர் திரு. செ. துரைசிங்கம், பண்டிதர் திரு. சி. கா. தம்பையா, பண்டிதர் திரு. சு. இராசையா. இந்த மூவரும் பண்டிதமணியின் முதல் மாணவர்கள் — மூத்த மாண வர்கள்—ஒருசாலை மாணவர்கள். பண்டிதமணியும் அவ ரின் மாணவர்கள் மூவரும் காவிய பாடசாலையின் ஞான விளக்குகள் இதிலொளி பெற்றவர்கள். இலங்கை முழுவ திலும் இப்பொழுதும் பிரகாசிக்கிறார்கள்.

சைவவித்தியா விருத்திச் சங்க மனேஜர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள், பண்டிதர் செ. துரைசிங்கத்தில் ஆரா அன்பும் பெரு நம்பிக்கையும் உள்ளவர்கள். சைவ அநாதசாலை இவரின் பொறுப்பில் விடப்பட்டது. இரவு பகலாக அந்தப் பணியில் பல வருடங்கள் உழைத்தார் பண்டிதர் செ, துரைசிங்கமவர்கள். அக்காலத்திலேயே அவ ரது மங்களகரமான திருமணமும் நிறைவேறியது. மனேஜர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் தனது பிள்ளைக்குச் செய்த சிறப்பு எனும்படி முன்னின்று நடத்தி ஆசீர்வதித் தார்.

பிற்காலத்தில் இங்கே இடமாற்றம் பெற்று வந்தார். இக் காலங்களில் காந்தீய சேவா சங்கம், ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம், சாகித்திய மண்டலம், கிராமாபிவிருத்திச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பவைகளில் அங்கம் வகித்து ஈடுபட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் இரண்டு விஷயங்கள் அவரின் இரத்தத்தோடு ஊறியிருந்தன. ஒன்று சமயம். சமயப்பணியில் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவில் திருப்பணி முக்கிய மானது. தனது பொருள், உடல், உயிர் என்ற மூன்றையுமே அதில் அர்ப்பணித்தவர் என்று சொல்லலாம். மற்றது தமிழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் பண்டித வகுப்புகள் - பரீட்சைகள் — வேலையற்றிருந்த பண்டிதர்களுக்கு ஆசிரிய நியமனம் பெறும் முயற்சி முதலியன அப்பணிகள். ஒருவர் இருவர் பலநாட்செய்ய முடியாத பணிகளையெல்லாம் தனி ஒருவராகவே பொறுப்பெடுத்து இரவு பகலாக ஊன்உறக்கமின்றிச் செய்யும் ஆற்றல் படைத்தவர்.

அந்தப் பெருமகனை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய புருஷர்

(காந்தி ஆசிரியர் அவர்கள், திருகோணமலை)

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தை எண்ணும் போது திரு. ஹன்டி பேரின்பநாயகம் ஐயா, திரு. சி. க. வேலாயுதபிள்ளை ஐயா, பண்டிதர் செ. துரைசிங்கம் ஐயா, தொண்டர் த. நல்லதம்பி ஐயா ஆகியோர் மனக்கண்முன் காட்சியளிக்கின்றனர். காந்தி வேலாயுதபிள்ளை அவர்கள் காந்தி சேவா சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்த காலத்தில் அவருக்கு வலக்கையாக உறுதுணையாக இருந்து உதவியவர் பண்டிதர் துரைசிங்கம் ஐயா அவர்கள். முனிவரும் மன்னரும் உன்னுவ பொன்னுன் முடியும். சங்கத்துக்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம் வாரி வாரி இறைப்பார் பண்டிதர். ஆண்டவன் தந்த சொத்து மக்கள் பணிக்கு உதவ வேண்டும் என்பது பண்டிதர் கருத்தாகும்.

பண்டிதர் ஐயா காந்தியடிகளின் கொள்கைகளில் மிக ஊறிப்போயிருந்தார். சர்வோதயக் கொள்கைகள் மனிதரின் அன்றுட வாழ்க்கையில் மிளிர வேண்டுமென விரும்பினுர். காந்தீய லட்சியங்களை அரைகுறையாக நிறைவேற்ற ஒரு போதும் விரும்பார். காந்தி சேவா சங்கக் கூட்டங்களில் இதனை வலியுறுத்துவார். தானும் அவ்வாறு இலட்சிய புருஷராக வாழ்ந்து காட்டினுர்.

பண்டிதர் ஐயாவின் சீரிய வாழ்வு - இலட்சிய வாழ்வு எங்கும் எல்லோராலும் போற்றப்பட்டது. இதனுல் அவரை இலட்சிய புருஷராகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கும் மத்தியஸ்தராகவும் மக்கள் கருதி அவரைப் பயன்படுத்தி, தம் வாழ்க்கையில் சிறப்பும் அமைதியும் கண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ஐயா காந்தியடிகளின் இலட்சியவாழ்வுடன் நின்றுவிடவில்லை. தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந் தொண்டாற்றினுர். தமிழ் சைவ இலக்கியங்களில் தீவிரமாக ஈடுபட்டுழைத்தார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் முக்கிய பங்கெடுத்து யாழ்ப்பாணம் முழுவதிலும் பண்டித வகுப்புக்கள் நடத்தி நூற்றுக்கணக்கான பண்டிதர்களை உருவாக்கினுர். பண்டிதர் பரம்பரை ஒன்றையே ஏற்படுத்திவிட்டார். கலாநிதி, பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் உத்தம மாணுக்கனுக அமர்ந்து கற்கும் வாய்ப்பு பண்டிதருக்குக் கிடைத்தது. அவர் செய்த புண்ணியம் மட்டுமல்ல தமிழ் - சைவ மக்கள் செய்த புண்ணியமுமாகும். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று வாழ்ந்தார் பண்டிதர்.

பண்டிதரின் அருமைப்பத்தினி பண்டிதை சத்திய தேவி அம்மையார் பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக இருந்து அவருடைய கடமைகளையும் சரிவரச் செய்து சமுதாயத்திற்கும், தமிழ் - சைவத்தொண்டாற்றி வருகிருர்கள். அவர்களுக்குக் கிடைத்த மூன்று பிள்ளைகளும் மும்மணிகளாக வளர்ந்து பெற்ருேருடைய புகழைப்பேணி நல்வாழ்வு வாழ்ந்து மக்களுக்கும் தொண்டாற்றி வருகிருர்கள்.

பண்டிதர் ஐயாவின் பிரிவு நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத பெரிய நஷ்டமாகும். அவருடைய இலட்சியங்களை மதித்து நடப்பதே நாம் செய்யும் நன்றிக்கடனுகும். அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிருேம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

# நினைவில் நீங்கா அறிவுச் சுடர்

சைவப்புரவலர், சிவமணி, வே. கந்தசாமி அவர்கள்
விபுலாநந்த அச்சகம் - புத்தகசாலை, யாழ்ப்பாணம்

உள்ளத்தால் பொய்யாத பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள் உயரிய தோற்றம் உடையவர். விரிந்த நெற்றியுடன் திரண்ட பெரிய கண்களை உடையவர். இவர் வெண்ணிற ஆடையர். துன்பமே தெரியாத புன்முறுவல் பூத்த ஆனந்தமயமான முகத்தையுடையவர். கலந்துரையாடலின் போது அன்பு கொட்டும் வசீகரமான பேச்சாளர். கோணுத நிமிர்ந்த நடையுடைய இவர் நேரான பாதையும் உடையவர்.

பல நாட்களாகப் பழகிய தொடர்பால் எமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்கு இலக்கணமாயும்;

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

என்னும் வள்ளுவர் வாக்குக் கமையவும் வாழ்ந்த உத்தம அறிஞர். செந்தமிழ்ப்பற்று, சமுதாயச் சிந்தனை, சைவ சித்தாந்த வாழ்க்கை வாழ்ந்தவர். தேசாபிமானம் மிக்கவர். தொன்மை மறவாதவர். இத்தகைய நல்ல சீலங்களுக்கு இறுதி மூச்சுவரை உழைத்த உத்தம பண்பாளர்.

பண்டிதரின் மறைவு நமது நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். புகழை விரும்பாத இச்சேவையாளரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

" நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு "

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர்களின் பண்டிதர்

பண்டிதை பொன். பாக்கியம் அவர்கள்
விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கோபுரக்கலசம் மறைந்து விட்டது. மறைந்த சங்கங்களுள் ஒன்ருகி விடாது ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைக் கட்டிக் காத்த பெருமை எங்கள் ஆசிரியர், அமரர், பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் அவர்களையே சாரும். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பெயரால் பண்டித வகுப்புக்களை நடாத்தி நூற்றுக்கணக்கான பண்டிதர்களை உருவாக்கியவர் எங்கள் ஆசிரியர். 'இந்த நாட்டிலே நன்கு கற்றுவல்ல ஆசிரியர்களையும், மத குருமார்களையும் உருவாக்க வேண்டும்' என்னும் நாவலர் பெருமானின் கருத்தை ஒரு சிறிதளவு நிறைசெய்திருக்கின்ருர்கள் அவர்கள்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, உபஅதிபர் திரு. பொ. கைலாசபதி ஆகிய இரண்டு வற்ருத அறிவு நதிகள் ஒரு காலத்திற் பாய்ந்து கொண்டிருந்தன. அந்த நதிகளிடம் முறைப்படி அறிவை முகந்துகொண்ட ஒரு கிளைநதி நமது ஆசிரியர் அவர்கள். பண்டிதமணியிடம் தமிழ் கற்ற நாங்கள் வேறு எவரிடமும் தமிழ் கற்க விரும்பமாட்டோம். எங்கள் சிந்தனைக் கண்கள், இரசனைக் கண்கள் மற்றவர்களைப் பொருட்படுத்த மாட்டாது.

இந்த மனேபாவம் அமைந்திருந்த வேளையில், யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் பண்டித வகுப்புக்கள் நடக்கின்றன என அறிந்து அங்கு நான் கற்கச் சென்றேன். அங்குதான் எங்கள் பண்டிதர் துரைசிங்கம் அவர்களிடம் கற்கும் பேறு கிட்டியது. நன்னூல் விருத்தி, யாப்பு, தண்டி, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகிய இவற்றை மாணவர்களுக்கு அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகஞ் செய்வதற்காக அவர் கொடுக்கும் முன்னுரை, நன்னூல், யாப்பிலக்கணம், தொல்காப்பியம், ஆகியவற்றின் சூத்திரங்களைக் கொண்டுகூட்டிக் கற்பிக்கும் உத்தி ஆகியன அங்கேயொரு அசல் பண்டிதமணியின் நகல் பண்டிதர் துரைசிங்கம் என நினைக்கச் செய்தது. எங்கள் பண்டித வகுப்புக்களுக்குப் பல வித்துவான்கள், பண்டிதர்கள், புலவர்கள் கற்பித்தார்கள்- அவர்களையெல்லாம் இயக்குபவராக ஒரு தலைவராக, தலைமைப் பண்டிதராக பண்டிதர்க்குப் பண்டிதராக விளங்கினுர் எங்கள் ஆசிரியர்.

எங்கள் ஆசிரியர் அவர்களிடம் நல்லாசிரியருக்கு வேண்டிய சகல இலக்கணங்களும் மிளிர்ந்து கொண்டிருந்தன. தெய்வக்கொள்கையால் அவரிடம் ஒரு தெய்வீக சக்தி ஜொலித்தது. எந்தப் பிரச்சனை மாணவனும் அவரிடம் பாடங்கேட்கும் பொழுது பெட்டிப்பாம்பாக அடங்கியிருந்தே கேட்பான். எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். வகுப்பறையில் அடங்கியொடுங்கிப் பாடங் கேட்கும் நாம் பாடம் முடிந்ததும் நமது பிரச்சனை எங்கள் ஆசிரியரிடமும் கூறும் பொழுது தாய்ப்பசுவைச் சூழநிற்கும் கன்றுக் குட்டிகளைப் போற் காட்சியளிப்போம். நான் முந்தி நீ முந்தி என முன்னணியில் நாம் நிற்கும் அனைவர்க்கும் ஆதரவுடன் பதிலிறுப்பார் எங்கள் ஆசிரியர். அன்னையினும் தயையுடைய ஆசிரியரை இனியெப்பொழுது காண்போம்.

தம்மிடம் கற்ற மாணவர்கள் வேலையற்றவர்களாக இருந்து வேதனைப்படக்கூடாது என்பதற்காக பலகஷ்டங்களையடைந்தும் பலருக்கு நியமனம் பெற்றுக்கொடுத்திருக்கின்றுர். வையத்தில் வாழ்வாங்கு வாழக் கொடுத்து வைத்தவர் எங்கள் ஆசிரியர். மனைத்தக்க மாண்புடையவரான எங்கள் ஆசிரியை பண்டிதை சத்தியதேவி - துரைசிங்கம் அவர்களை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றமையே அவருக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருகும். ஆசிரியர் அவர்கள் தமிழுக்காகத் தம் உடல் பொருள் அத்தனையையும் தியாகம் செய்து வாழப் பக்க பலமாக நின்றுதவியவர்கள் எங்கள் ஆசிரியை. இருபெரும் பக்குவசாலிகள் அருமருந்தன்ன மக்கள் மூவரைப் பெற்று கல்வியிலும், பண்பிலும், செல்வத்திலும் சிறப்புற்று விளங்கியமை கண்டாரை இன்பமுறச் செய்தது. இங்ஙனம் எடுத்துக்காட்டாக இருந்த ஒரு குடும்பத்தின் குடும்பத்தலைவனையே பறித்துச் சென்ற விதியின் கொடுமைதான் என்னே!

இறுதி மூச்சுவரை செந்தமிழின் வளர்ச்சிக்காக உழைத்த எங்கள் ஆசானின் பூத உடல்தான் அழிந்தது. புகழ் உடல் என்றும் நின்று நிலவும். ஓயாது தமிழுரைத்த உத்தமன் - சபைகள் கூட்டித் தமிழ்வளர்த்த சான்றோன் மாணவரின் உளங்குளிரக் கல்வி புகட்டிய நல்லாசான் நமக்காக மேலுலகில் தமிழ்ச்சபை அமைக்க முந்திச் சென்று விட்டார். அவர் அமைக்கும் தெய்வலோக தமிழ்ச்சபையில் நாமும் இடம்பெற உழைக்க வேண்டும்,

எங்கள் ஆசிரியர் அவர்களது இழப்பு என்னைப் பொறுத்த வரையிலே இரட்டைமடங்கு இழப்பாகும் ஆசிரியர் எனக்குக் கற்பித்த வகையிலே ஆசிரியராகவும் பண்டித மணியென்னும் தமிழ்த்தாயின் கருப்பத்தில் உதித்த மூத்த புதல்வன் என்கின்ற வகையில் அருமைச் சகோதரரும் ஆவார். இவ்வளவு விரைவிலே அவருக்கொரு மரணம் என்பதை நம்மால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அவரோடு தொடர்புபட்ட அனைவரும் கண்ணீர் விட்டுக் கலங்குகின்றோம் எனினும் உலகநியதியை நினைந்து நாம் மனந்தேறுவதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் அவரது அருமை மனைவியாருக்கும், மக்களுக்கும், மருமக்களுக்கும், பேரக்குழந்தைகளுக்கும் ஆண்டவன் மன அமைதியைக் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். எங்கள் ஆசிரியரின் ஆன்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழை விரும்பாத மனிதமாமணி

சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை பி. ஏ,

புகழை விரும்பாதவர் யார்? எல்லோரும் விரும்புவர் என்பது பொதுமொழி — பொதுவிதி.

இதற்கு விலக்காக விளங்கியவர் எங்கள் மனித மாமணி பண்டிதரவர்கள்.

நாற்பது ஆண்டுகளாகத் தொடர்பு சாதாரண தொடர்பன்று. குரு — சீசத் தொடர்பு. அதற்கு அப்பால் அன்னையால், அத்தனுல், அண்ணலாக விளங்கிய தொடர்பு.

ஆயிரம் ஆயிரம் வசதிபடையாத ஆண்குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் பேணிப்பாதுகாத்த பரோபகாரி பண்டிதரவர்கள்.

சொல் வேறு செயல்வேறு ஆகக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் செயலே கடைசி மூச்சாகக் கொண்டு பல்வேறு துறைகளிலும் முத்தான முதற்ருெண்டு செய்தவர் பண்டிதரவர்கள். அவர்கள் சற்றே தம் புகழையும் பரப்ப இடங்கொடுத்திருந்தால் ....

எம்போன்றவர்கள் இந்த 40 வருட காலத்திலே ஏதாவது நல்லதைச் செய்திருந்தால் அஃது அன்னரிடம் கற்ற சரித்திரபாடமும், தமிழ்ப்பாடமும் தந்த வீர உணர்ச்சியின் விளைவாகும்.

ஒரு சிறு கதை· இப்பொழுது நடைமுறையிலுள்ள சைவசமய பாடத்திட்டம் தொடர்ந்து ஓரளவு நடைமுறையில் இருப்பதற்கு மூலகாரணம் அன்னர் பதிப்பித்த நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் ஆலய மலரிற் காணப்பட்ட ஒரு கட்டுரையாகும்.

கட்டடத்தின் மேற்பகுதியை எவரும் அறிவர். அத்திபாரத்தை அறியார். எத்தனையோ துறைகளின் அத்திபாரமாக — மூலவேராக விளங்கிய எங்கள் பண்டிதரவர்கள் முற்றத்துறந்த ஞானிகளைப் போன்ற உள்ளம் படைத்தவர்கள்.

புகழை அவர் விரும்பவில்லை. பொன்னுன தியாகி அவர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சடையான் அடிகள் சேர

சேந்தன்

ஆரியமுந் தமிழ்மொழியுங் காக்குஞ் சங்கம்
அலைப்புண்டு சிதையாமற் காத்த செம்மல்
பாரிய நற்பொறுப்புகளைப் பலவாண் டாகப்
பகை நொதுமல் பேணுது புரந்தவள்ளல்
சீரியநற் துரைசிங்கச் செம்மல் நீயே
தீந்தமிழின் சுவைகண்டாய் செயலில் வல்லாய்
ஆரியமும் தமிழ் மொழியும் ஆனஈசன்
அடிமறவா அன்பநினை என்று காண்போம் 1

தருமமெனும் ஒருபொருளின் உண்மை காட்டிச்
சங்க மொழி வாயில்களைத் திறந்துகாட்டிக்
குருமொழியாம் சைவநெறிக் கோண்கள் காட்டிக்
குணக்குன்ரும் குரவர் மொழிக்கொள்கை காட்டி
அருநெறிய காந்தீய வழியைக் காட்டி
அன்புவழி நின்வாழ்க்கை அமைதி காட்டி
ஒருபோதும் எம் நெஞ்சம் உலராவண்ணம்
உணர் வரியாய் அறநீரில் ஊறவைத்தாய் 2

ஒண்பொரு ளொன்றே யென்ற தத்துத்தை
உணர்வுடனே யாமெல்லாம் அறியத் தந்தும்
நண்ணும்தொல் காப்பியநூல் நவிலும் ஞானம்
நன்னூலோ டொப்பிட்டு நயக்கத் தந்தும்
எண்ணரிய அணியோடு யாப்பு நூல்கள்
எளிதாக மனம்பதியும் வண்ணந் தந்தும்
பண்ணமையும் கவிதைகளுப் பண்பினேடு
பாடுக வென்றெமை யாற்றுப் படுத்தினீரே. 3

பலநூற்றுக் கணக்காகப் படித்தோர் தோன்றிப்
பழந்தமிழின் சுவைநுகர்ந்து பண்புங் கண்டு
உலகமெலாம் ஒளிபரப்ப உள்ளங் கொண்டாய்
உறுதியுடன் ஊக்குவித்து வெற்றிகண்டாய்
மலையாது வண்டமிழை முகிலே போல
வழங்குவதில் இளைக்கின்ருய் போலு மென்றே
அலைபுனல் சேர் செஞ்சடையான் அடிகள்சேர
அக்கூற்றும் அழைத்தானே அறிகிலோமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org